
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1086**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---

## 'மைனாரிட்டி' தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

**47**

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்




# இஸ்லாமியர் வாழ்வில், ஒளியேற்றும் உலமாக்கள் வாரியம்!

**ம**தவழி மற்றும் மொழிவழிச் சிறுபான்மையினரின் நலன்களைப் பேணிக் காத்திடவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்திடவும், 1989-இல் மாநில சிறுபான்மையினர் ஆணையத்தைத் தோற்றுவித்தார் முத்தமிழறிஞர் கலைஞர். 13.12.1989 அன்று தோற்றுவிக்கப்பட்ட இந்த ஆணையம் 14.03.1990 அன்று செயல்படத் தொடங்கியது. ஆனால், அடுத்து வந்த அ.தி.மு.க. அரசோ மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு சிறுபான்மையினரை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியது. அதற்கெதிராக, திராவிட முன்னேற்றக் கழகம் போர்க்குரல் எழுப்பி வென்றதுடன், மீண்டும் 2006-இல் கழக அரசு அமைந்தவுடன் உருது அகாடமி, சிறுபான்மையினருக்கான கல்வித் திட்டங்கள், தொழில் பயிற்சித் திட்டங்கள் பலவற்றைத் தொடங்கினார் கலைஞர். அதில் ஒன்றுதான் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்.

### நலவாரியம் தொடக்கம்!

உலமாக்கள் மற்றும் பணியாளர்களுக்கு நலவாரியம் வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இஸ்லாமிய சமூகத்திடம் இருந்து வந்தது. குறிப்பாக, 01.02.2009 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் தமிழ்நாடு மாநில இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நடத்திய உலமாக்கள், உமராக்கள் மாநாட்டிலும் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது. உலமா பெருமக்கள், இமாம்கள், பள்ளிவாசல் தர்கா பணியாளர்கள், ஜமாஅத் தலைவர்கள் பல்லாயிரக்கணக்கில் பங்கேற்ற இம்மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், "இக்கோரிக்கை முதல்வர் கலைஞர் அவர்கள் கவனத்துக்குக் கொண்டுசென்று நிறைவேற உறுதுணையாக இருப்பேன்" என்று உறுதியளித்தார்.

அதன் பலனாக, 2009-2010-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், 'மாநிலத்தில் உள்ள பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் மதரஸாக்களில் உள்ள உலமாக்கள் மற்றும் பணியாளர்களுக்கு என 'உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியம்' ஒன்று அமைக்கப்படும்' என்ற அறிவிப்பு வெளியானது. கடுமையான வலியில் முதுகுத்தண்டுவட அறுவைசிகிச்சை செய்து, 38 நாட்கள் ஓய்வுக்குப் பிறகு, மார்ச் 14-ஆம் தேதி தலைமைச் செயலகம் வந்த முதலமைச்சர் கலைஞர் கையெழுத்திட்ட முதல் கோப்பே உலமாக்கள் பணியாளர் நலவாரியம் பற்றியது தான். இதன் தொடர்ச்சியாக, ஆகஸ்ட் 24-ஆம் தேதியன்று ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் வாரியம் தொடங்கப்பட்டது.

"மசூதிகளிலும் தர்காக்களிலும் இறைப்பணியாற்றும் உலமாக்கள், இமாம்கள், மோதினார்கள் போன்றோர் தங்களின் வாழ்நாளை சமூகத்திற்காக அர்ப்பணிக்கிறார்கள். ஆனால், அவர்களின் முதுமைக் காலத்திலும், பொருளாதார நெருக்கடியின்போதும் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்க ஒரு கட்டமைப்பு தேவை. ஏற்கெனவே தொழிலாளர்களுக்கு நல வாரியங்கள் இருப்பதுபோல, சிறுபான்மையின சமூகத்தில் உள்ள ஆன்மிகப் பணியாளர்களுக்கும் ஒரு சமூகப் பாதுகாப்பு (Social Security) வழங்கப்பட வேண்டும் என்பதே இந்த வாரியத்தின் நோக்கம். இந்த வாரியம் என்பது ஒரு சலுகை அல்ல, இது உங்களின் உரிமை" என்று கூறி இவ்வாரியத்தைத் தொடங்கினார் கலைஞர்.

### வாரியத்தின் நோக்கம்!

இந்நலவாரியத்தில் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் மதரஸாக்களில் பணிபுரியும் 'ஆலிம்கள்', 'பேஷ் இமாம்கள்', 'அரபி ஆசிரியர்கள்', 'மோதினார்கள்', 'பிலால்கள்' மற்றும் இதர பணியாளர்கள், 'தர்காக்கள்' மற்றும் 'அடக்கஸ்தலங்கள்', 'தைக்காக்கள்', 'ஆர்கானாக்கள்' மற்றும் 'இஸ்லாமிய அனாதை இல்லங்கள்' ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் முஜாவர் உள்ளிட்ட பணியாளர்கள் உறுப்பினராகலாம். 18 வயது நிரம்பிய 60 வயதுக்கு மேற்படாத பணியாளர்கள் இதில் உறுப்பினராகத் தகுதியுடையவர்கள். சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், இதன் தலைவராக இருப்பார். இதில் அரசு அதிகாரிகள் மற்றும் அரசு சாரா உறுப்பினர்கள் (உலமாக்கள் மற்றும் சமூகப் பிரதிநிதிகள்) இடம் பெற்றுள்ளனர்.

> **உலமாக்கள் வாரியம் என்பது வெறும் பெயரளவில் அல்லாமல், உங்களின் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒளியேற்றும் வகையில் செயல்படும்!**

### வழங்கப்படும் நிதி உதவிகள்

அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நல உதவிகளும் இவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் இணையும் உறுப்பினர்களுக்குத் திருமண உதவியாக ஆண்களுக்கு ரூ.2,000, பெண்களுக்கு ரூ.5,000, மகப்பேறு உதவியாக ரூ.6,000, கண் கண்ணாடி வாங்க ரூ.500, 60 வயதடைந்தவர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியமாக ரூ.3,000, இயற்கையான மரணங்களுக்கு ரூ.20,000, விபத்து மரணங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் எனப் பல்வேறு நிதி உதவிகளைக் கழக அரசு அறிவித்தது. அதேபோல, கல்வி உதவித் தொகையாக, படிப்பைப் பொறுத்து ரூ.1,000 முதல் ரூ.12,000 வரை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

உறுப்பினர் சேர்க்கை முதல் நிதி உதவிகள் வழங்குவது வரை வாரியத்தின் அனைத்து பணிகளும் அனைத்து மாவட்டங்களிலும் சீராக நடைபெறுவதைக் கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும் மாநில அளவில் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. சேர்க்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை, அடையாள அட்டை வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை, நல உதவிகள் இனம் வாரியாக வழங்கப்பட்ட எண்ணிக்கை மற்றும் தொகை, மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் தொகை போன்ற விவரங்கள் அடங்கிய அறிக்கையினைப் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் வாரியத்தின் உறுப்பினர் செயலருக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. இதனால், தொய்வில்லாமல் வாரியம் செயல்படுவதையும் தொடங்கப்பட்டபோதே உறுதிசெய்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

### புத்துயிர் கொடுத்த 'திராவிட மாடல்'!

தற்போதைய தி.மு.க. ஆட்சியில், இந்த வாரியத்தின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ1,500-லிருந்து ரூ.3,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளை விரைவாகச் சென்றடைய மாவட்ட அளவில் சிறப்பு முகாம்களும் நடத்தப்படுகின்றன. உலமாக்கள் இருசக்கர வாகனம் வாங்க ரூ.25,000 அல்லது வாகன விலையில் 50 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. உலமாக்கள் தங்கள் பணிகளுக்கு எளிதாகச் சென்று வர சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன. உறுப்பினர்களின் குடும்பத்தினர் சுயதொழில் செய்ய ஏதுவாக இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. விண்ணப்பிக்கும் முறையை எளிமையாக்கி, விரைவான பட்டுவாடாவை உறுதி செய்து வருகிறது திராவிட மாடல் அரசு. உலமாக்களின் குழந்தைகளுக்குத் தொழிற்கல்விக்கான முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

'தமிழகத்தில் சிறுபான்மையினராக இருக்கும் மக்கள் தங்களை ஒருபோதும் அந்நியர்களாகக் கருதக் கூடாது. உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் அரணாக இந்த அரசு எப்போதும் இருக்கும். உலமாக்கள் வாரியம் என்பது வெறும் பெயரளவில் அல்லாமல், உங்களின் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒளியேற்றும் வகையில் செயல்படும்' என்றும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உறுதி அளித்துள்ளார். புதிய உறுப்பினர்கள் சேர்க்கை கடந்த நான்கரை ஆண்டுகளில் எண்ணற்ற சிறப்பு முகாம்களை நடத்தியுள்ளது திராவிட மாடல் அரசு. தற்போது இவ்வாரியத்தில் 15,000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர்.

'இந்த வாரியம் வெறும் நிதியுதவி வழங்கும் அமைப்பு மட்டுமல்ல, சிறுபான்மையின மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் ஒரு தளம்' என்று கூறி, கலைஞர் போட்டுக் கொடுத்த பாதையில், தற்போதைய திராவிட மாடல் அரசு, உலமாக்கள் மற்றும் பணியாளர்களுக்கான பயன்களை இன்னும் ஒரு படி மேலே கொண்டுசென்றுள்ளது. உலமாக்கள் வாரியத்தின் வெற்றியைத் தொடர்ந்து, கிறிஸ்தவ மத குருமார்கள் மற்றும் தேவாலயப் பணியாளர்களுக்கென தனியாக ஒரு கிறிஸ்தவ பணியாளர்கள் நல வாரியத்தையும் 2022-இல் திராவிட மாடல் அரசு அமைத்துள்ளது.

...நீளும்

---

## மருத்துவர் பரிந்துரையே முதன்மையானது!

உடல் பருமனைக் குறைக்க, யூடியூப் பார்த்து வெங்காரம் சாப்பிட்ட கல்லூரி மாணவி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இதுபோன்று யூடியூப் பார்த்து எந்த சிகிச்சை முறையும் மேற்கொள்ளக் கூடாது என அறிவுறுத்தி, சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார், சிவகங்கையைச் சேர்ந்த பொதுநல மருத்துவர் ஃபரூக் அப்துல்லா.

'பொதுவாக, சிறுநீர்ப்பாதைத் தொற்று, இரைப்பைப் புண், தோல்நோய் சிகிச்சை ஆகியவற்றில் வெங்காரத்தை சித்த மருத்துவர்கள் உபயோகிக்கின்றனர். சித்த மருத்துவம் முறையாகப் பயின்று, பட்டம் பெற்ற மருத்துவர்களுக்குத் தெரியும். ஆனால், வெங்காரத்தை அப்படியே மருந்தாக உபயோகிக்க முடியாது. சரியான முறையில் சுத்திகரிக்க வேண்டும்.

மேலும், ஒரு மருந்து வழங்கப்படும்போது அதற்குரிய சரியான நோய், சரியான மருந்து, சரியான அளவு, சரியான வழியில், சரியான கால அளவில் வழங்கப்பட வேண்டும். அதை விடுத்து, பொதுவாக காணொலியில், 'வெங்காரம் சாப்பிட்டால், எடை குறையும்' என்று கூறுவதில் உள்ள பிரச்சினையைத்தான் இப்போது காண்கிறோம். பாராசிட்டமால் குழந்தைகளுக்குக் கொடுத்தால் காய்ச்சல் குறையும் என்று கூறுவதைப் பார்த்துவிட்டு, தன் இஷ்டத்துக்கு ஒரு டோஸ் அளவில் பிறந்த குழந்தைக்கு பாராசிட்டமால் கொடுத்தால், அதுவும் ஆபத்தில்தான் முடியும்.

நோய் ஏற்பட்டால், அதற்குரிய மருத்துவரை சந்தித்து சிகிச்சை பெற வேண்டும் என்ற ஒரு சாதாரண அடிப்படை அறிவுகூட நம்மிடையே இல்லாமல் போனதுதான், இங்கு பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைகிறது. இந்த சகோதரி, வெங்காரத்தைச் சாப்பிட்டதால் நச்சுத்தன்மை உண்டாகிக் கடும் வயிற்றுப் போக்கு, குடல் இரைப்பைப் புண், அதனால் ஏற்பட்ட ரத்தப் போக்கு, சிறுநீரகச் செயலிழப்பு ஆகியவற்றால் உயிரிழந்திருக்க வேண்டும். பக்கவிளைவுகள் இன்றி மருந்து தருகிறேன் என்று யாரும் கூறினால், அதைத் தயவுகூர்ந்து நம்பாதீர்கள். மருத்துவர்களை நம்பாமல் சாட் ஜி.பி.டி., ஏ.ஐ ஜெமினி, யூடியூப், இன்ஸ்டாகிராமை மட்டுமே நம்பினாலும் சேதம்தான்.

உடல் எடை குறைப்புக்கு மாவுச்சத்தைக் குறைக்க வேண்டும் என்றால், உரிய வல்லுநர் கண்காணிப்பில் செய்வதுதான் நல்லது. உடல், உயிர் விஷயத்தில் ஒரு முயற்சி செய்யும்முன் துறை சார்ந்த மருத்துவ வல்லுநரிடம் கலந்தாலோசனை செய்யுங்கள்' என்ற அவரது பதிவு கவனிக்கவைக்கிறது.

---

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரைக் காணும் வாய்ப்பு!



ஏ.மணிகண்டன்

2017-ஆம் ஆண்டு, எங்கள் 10-ஆம் ஆண்டு திருமண நாள் அன்று, கழகத்தின் சூரியன், எங்கள் ஆருயிர் தலைவர் கலைஞர் அவர்களைக் கண்டு வணங்கி, என் மனைவி குழந்தைகளுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டேன். தலைவரைக் காணும் வாய்ப்பு கிடைத்தது, எங்கள் வாழ்வில் மறக்க முடியாத ஒன்று.

– ஏ.மணிகண்டன்,
102-வது வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்,
அண்ணா நகர் வடக்குப் பகுதி, சென்னை மேற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## நல்வரவு

### நாகை ஸ்டீல் ரோல் மில்!

1958-ஆம் ஆண்டு மே 10-11 தேதிகளில், தஞ்சை மாவட்டக் கழகத்தின் மூன்றாவது மாநாடு திருவாரூரில் நடைபெற்றது. மாநாட்டு தீர்மானங்களில் ஒன்று, நாகப்பட்டினத்தில் இயங்கிவந்த 'டாடா ஸ்டீல் ரோலிங் மில்' முடக்கப்பட்டதைச் சரிசெய்து, அரசு ஏற்று நடத்த வேண்டுமென வலியுறுத்தியது. வல்லம் பகுதியில் கிடைக்கும் 'ஸ்படிக' கற்களைக் கொண்டு கண்ணாடி தயாரிக்கும் தொழிற்சாலையை உருவாக்க வேண்டுமெனவும் தீர்மானம் வலியுறுத்தியது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.